# <u>சோளிங்கர் நகராட்சி</u>

**<u>2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 05.06.2026 ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில்</u>**
**<u>நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்</u>**
**<u>தலைமை:– திருமதி.தமிழ்செல்வி அசோகன் நகரமன்ற தலைவர்</u>**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 05.06.2026 | <u>பொருள் எண்.01</u><br><u>சோளிங்கர் நகராட்சி– திடக்கழிவு மேலாண்மை பணிகள் – தூய்மை இந்தியா திட்டம்</u><br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026, 01/04/2026 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது அதன்படி நகராட்சி பகுதிகளில் குப்பை உற்பத்தி செய்பவர்கள் (பொதுமக்கள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள்) தங்களது குப்பையை மக்கும் குப்பை, மக்காத குப்பை சுகாதார கழிவுகள் மற்றும் சிறப்பு கவனத்திற்குரிய கழிவுகள் என நான்கு விதமாக தரம் பிரித்து நகராட்சியிடம் வழங்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–ஐ தீவிரமாக நகராட்சி பகுதிகளில் நடைமுறைபடுத்துவதற்கு விரிவான வழிகாட்டுதல்களை, மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி உள்ளது. (உரிமையியல் மேல்முறையீட்டு எண்.6174/2023 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்.7728/2023, நாள் 29.04.2026).<br>நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும்குப்பை, மக்காதகுப்பை சுகாதார கழிவுகள் மற்றும் சிறப்பு கவனத்திற்குரிய கழிவுகள் என தரம்பிரித்து வழங்குதல், சேமித்தல் அதனை கொண்டு சென்று செயலாக்கம் செய்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவதற்கு நகராட்சி பகுதிகளில் வார்டுகள்தோறும் நகரமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நகராட்சிபொறியாளர்/ துப்புரவு ஆய்வாளர்களை துணைத் தலைவர்களாகவும், நகராட்சி தூய்மை பணிமேற்ப்பார்வையாளர்கள், NGO (அரசுசாராநிறுவனங்கள்), தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள், குடியிருப்பு நலச்சங்க பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களை சார்ந்தோர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட குழுக்களுடன், வார்டு பகுதிகளுக்கு சென்று 05/06/2026 முதல் 14/06/2026 வரை வீடுவீடாக சென்று குப்பையை நான்கு விதமாக தரம்பிரித்து வழங்கும் பொருட்டு பொதுமக்களிடையே தகுந்த விழிப்புணர்வினை ஏற்ப்படுத்துவதற்கு மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த பொருள் தொடர்பாக சம்மந்தப்பட்ட நகராட்சிகளில் 05.06.2026 அன்று சிறப்பு நகரமன்ற கூட்டத்தினை நடத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு உச்சநீதி மன்றத்தால் வழங்கப்பட்டுள்ள உத்திரவு (உரிமையியல் மேல்முறையீட்டு எண்.6174/2023 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண் 7728/2023 நாள்.29.04.2026 மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஆகியவற்றின் நகல்கள் நகரமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.1033<br>ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலககுறிப்பு :<br>மன்றம்அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1042/2026/எச்1) | |

(ஓம்)தமிழ்செல்வி அசோகன்
நகர மன்ற தலைவர்
சோளிங்கர் நகராட்சி

/உண்மை நகல்/

N. Nagaraj

ஆணையாளருக்காக
சோளிங்கர் நகராட்சி

12/06/2026.